IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# கம்பன் காவியத்தில் வானர குலப் பெண்கள்

ம. சிலம்புச்செல்வி
**(M. Silambu Selvi)**

பதிவு எண்: P3887
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 21.

கம்பன் காவியம் உணர்த்தும் கருத்துக்களுக்கு ஏற்றதாக அமைவது கதைப் பாத்திரங்களேயாகும். பெண்ணின் பெருமையை விளக்கும் நோக்கில் காவியம் அமைகின்றது. மனிதகுலப் பெண்களுக்குச் சமமாக, வானர குலப் பெண்களையும் பெருமைப்படுத்தியிருக்கிறார் கம்பர். மனித மாண்புகள் எங்கனம் இவ்வுலகத்தில் மிளிர்கின்றனவோ அதுபோலவே வானரகுலத்தில் வாழும் பெண்களின் குணவியல்புகளை மிளிர வைக்கின்றது இக்காவியம். அவ்வகையில் தாரை முதல் அஞ்சனாதேவி வரையிலும் பொதுநிலைத் தன்மையில் வானரகுலப் பெண்களின் உணர்வுகள் காவியத்திற்குள் உணர்த்தியிருப்பதை இவ்வியலில் விளக்கப்படுகின்றது.

**தாரையின் மாண்புகள்**

வான்மீகி முனிவர் ‘மஹா கன்னிகைகள்’ என்ற சிறப்பு அடைமொழியோடு மூன்று பெண்மணிகளைக் காட்டுவார். மூவரும் ஒவ்வொருக்கொருவர் வேறுபட்டவர்கள். முதலாமவள் அகலிகை, அடுத்தவள் தாரை, மூன்றாமவள் மண்டோதரி, அகலிகை போன்றோர் சந்தர்ப்பச் சூழலில் சிக்குண்டு இராமனால் தூய்மைப்படுத்தப்பட்டவள். மண்டோதரி இயற்கையாகவே தூய்மையானவள். தாரை இவர்கள் இருவருக்கும் இடையில் நின்றவள். தாரை தூய உள்ளம் கொண்டவள். தொடக்கத்தில் அவளுடைய தூய்மை, வாலியால் மங்க வைக்கப்படுகிறது. இலக்குவனுடைய வெகுளியை மடை மாற்றும்போது அந்தப் பேரொளி மிளிரத் தொடங்குகிறது. தாரை வாலியின் மனைவியாக வாழ்ந்தபோதும், அவள் மறைவுக்குப் பின்னர் சுக்ரீவனுக்குத் தாய் போன்ற நிலையில் வாழ்ந்தபோதும், ஒரு சராசரிப் பெண்ணாக இல்லாமல், தான் வாழும் இடத்தில் தன்னைச்

சார்ந்தவர்களின் நலன் கருதித் தன்னால் இயன்ற உதவி செய்து வாழும் உத்தமப் பெண்ணாகத் திகழ்கின்றாள்.

**வாலியை தாரை தடுத்தாலும் குணம்**

இராமனும், இலக்குவனும் மதங்கர் தவப்பள்ளியை விட்டு நீங்கி சுக்ரீவன் உறைந்திருக்கும் இரலை மலையை நோக்கிச் செல்கின்றனர். வாலியால் துரத்தப்பட்டு அம்மலையில் தங்கியிருக்கும் சுக்ரீவன் தசரத குமாரர்கள் வருகையைக் கண்டு அஞ்சி. அனுமனிடம் அவர்களைப் பற்றிய உண்மைகளை அறிந்து வருமாறு கூறுகிறாள். அனுமன் அவர்களின் நிலையை உணர்ந்து வந்து சுக்ரீவனை அழைத்துச் செல்கிறான். அனுமன் இராமனிடம் வாலி, சுக்ரீவனுக்கு இழைத்த கொடுமைகளை எடுத்துரைக்கிறான். இராமன், சுக்ரீவனிடம் வாலியைக் கொன்று உரிமையையும் நாட்டையும் மீட்டுத் தருவதாகக் கூறுகிறான். சுக்ரீவன் வானரப் படைகளின் உதவியால் சீதை இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டு பிடிக்கலாம் என்று மொழிகிறான். அதற்கு இசைந்த இராமன், சுக்ரீவனிடம் வாலியைப் போருக்கு வருமாறு அழை என்று கூறுகிறான்.

வாலி சுக்ரீவன் மேல் பெருஞ்சினம் கொண்டு போருக்குப் புறப்படுகிறான். அப்பொழுது தாரை அவன் எதிரில் தோன்றி போகாதீர்கள் என்று கூறுகிறாள். மேலும், நீங்கள் போருக்குச் செல்வதை தான் விரும்பவில்லை என்பது போல் கூறித் தடுக்கின்றாள். வாலியின் வாயிலிருந்து கோபத்தால் பகைவர, அவன் கண்களிலிருந்து வரும் தீயில் தாரை தன் நெடும் கூந்தல் தீய்கின்றது. இதனைக் கம்பர்,

***"ஆயிடைத் தாரை என்று அமிழ்தன் தோன்றிய***
***வேயிடைத் தோளினாள் இடை விளக்கினாள்***
***வாயிடைப் புகைவர, வாலி கண்வரும்***
***தீயிடைத் தன்நெடுங் கூந்தல் தீகின்றாள்"1***

என்ற பாடல்வரியில் தாரையின் நிலையை எடுத்துக் கூறுகிறார். தாரை வாலியைத் தடுத்ததும், வாலி தாரையைப் பார்த்து அன்புடன் பேசுகின்றான். அவன் மிகப்பெரிய சினத்துடன் புறப்பட்டும் அன்புடைய கற்புக்கரசியான மனைவியைக் கண்டவுடன், அவள் வார்த்தையைக் கேட்டவுடன் தன் கோபத்தை அவளிடம் காட்டாது சாதாரணமாகவே பேசுகின்றான்.

'தாரையே! என்னைப் போருக்கு அழைத்த சுக்ரீவனுடைய நெஞ்சத்தைக் கலக்கித் தேவர்கள் முன்னர் பாற்கடலைக் கடைந்து அமிழ்தத்தைக் கவர்ந்து கொண்டாற் போன்று, அவன் உயிரைக் குடித்து விரைவில் மீண்டு வருவேன் மலைக்குல மயிலே! என்னை விலக்காதே விட்டு விடு' என்கிறான். இதனை,

*"விலக்கலை விடுவிடு விரித்துளான் உரம்*

*கலக்கி அக்கடல் கடைந்து அமுது கண்டென*

*உலக்க இன்னுயிர் குடித்து ஒல்லை மீள்குவன்*

*மலைக் குல மயிலே"2*

என்ற பாடல் உணர்த்துகிறது. 'கண்ணே! என்னை விலக்காதே விட்டு விடு' என்பது போல அன்புடன், உரிமையுடன் கூறுகின்றான். இவ்விடத்தில் தாரை அன்றி வேறொருவர் எதிர்வந்து வாலியைத் தடுத்திருந்தால் வாலிக்கு இருந்த கோபத்தில் எதிர் வந்தவர் யாவராயினும் அவரை முதலில் கொன்றிருப்பான்.

தாரை தடுக்கும் தடுக்க வேண்டிய உறவும் உரிமையும் உடையவள். ஆகவே அவள் கோபம் சற்று தணிந்து அவள் அன்பு வேண்டுகோளுக்கு பதில் சொல்லி ஆறுதல் சொல்லும் மனநிலை ஏற்பட்டது. வாலிக்குத் தாரை அமிழ்தம் போன்ற இனிமையுடையவள் என்பதைக் கம்பர் பல இடங்களில் பதிவு செய்கிறார்.

*"மகளிர் சாயல் மைந்தர்க்கு மைந்து"3*

சிறந்த வீரன் எவனும் வீரனுக்கு வீரனாகவும் தன்னிடம் உண்மையான அன்பு செலுத்துபவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருப்பது இயற்கை. தாரை சிறந்த அழகி, தன் கணவன் ஒருவனையே எண்ணி வாழ்கின்ற கற்புக்கரசி. ஆகவே, தன் வாழ்க்கையில் உண்மையான அக்கறை கொண்டவள் என்பதால் அவளுக்குப் பதில் சொல்ல வேண்டியவனாக வாலி இருக்கின்றான். ஆகையால், 'மலைக்குல மயிலே என்னை விட்டுவிடு' என்கின்றான்.

மயில் அழகும், கண்ணிற்குக் கவர்ச்சியும், இனிமையும் நல்லனவற்றையே செய்யும் இயல்பும் கொண்டது. தாரை அழகுடையவள் மயிலுக்குரிய சகல பண்புகளையும் பெற்றிருந்தாள் கிஷ்கிந்தை மலைக்குலத்து அரச பரம்பரை தழைத்து வந்ததற்கும், தழைத்து வருவதற்கும், இனியும் தழைத்து வாழ்வதற்கும் நீதானம்மா காரணமாக இருந்து புகழைத் தேடித்தரப் போகின்றாய்! உன்னால்தான் உலகு உள்ளளவும் இம்மலைக்குலத்திற்கு புகழ நிலைத்து நிற்கப் போகின்றது என்பது தோன்ற 'மலைக்குல மயிலே!' என்றான். இளங்கோவடிகள் கண்ணகியை அறிமுகப்படுத்துகின்ற காலத்தில்,

*"மாகவாண் நிகர் வண்கை*

*மாநாய்கன் குலக் கொம்பர்"4*

என்றார். மாநாய்கன் மகள் என்றோ, மாநாய்கன் கொம்பு என்றோ, மாநாய்கன் பெண் என்றோ கூறவில்லை.

மாநாய்கன் குலம் தழைக்க, மாநாய்கள் புகழ் ஓங்க வந்தவள் என்ற பொருளில் 'குலக்கொம்பு' என்றார். மற்றொரிடத்தில், மாதவி கோவலனுக்குத் தந்த கடிதத்தில்,

***"குரவர் பணியன்றியும் குலப் பிறப் பாட்டியொடு***

***இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியேன்"5***

என்று கண்ணகியோடு இரவோடு இரவாகக் கோவலன் நகரை விட்டுச் சென்றதை மாதவி சொல்வதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். ஆகவே, வாலியின் வாயிலாகவே தாரை தற்காத்தவள், தற்கொண்டான் பேணினவள் என்பதை உணர முடிகிறது.

கணவனுக்கு உணவு முதலியவற்றையளித்து உடலைப் பேணுவது போலவே, உயிருக்கு ஆபத்து வருங்காலத்து அதைக் காப்பதும் கற்புடைய மனைவியின் தலையாய கடன். இதில் தாரையும் விதிவிலக்கல்ல. ஆகையால் அவன் வாலியிடம், 'நீங்கள் தான் இந்த நாட்டிற் அரசராகும் தகுதி உடையவர்கள். தங்களின் கீழ் வாழ வேண்டியவன் தான் சுக்ரீவன். இதுநாள் வரைத் தங்களைக் கண்டு பயந்து ஒளிந்திருந்த சுக்ரீவன் தற்போது புதிய பலம் எதையும் பெற்றுதவிடவில்லை. இருப்பினும் தங்களுடன் போர் செய்யத் துணிந்தது ஒரு பெருந் துணையைத் தற்போது பெற்றுள்ளான்' என்று கூறுகிறாள். இதனை,

***"கொற்றவ! நின்பெரும் குவவுத் தோள்வலிக்கு***

***இற்றனன். முன்னைநாள், ஈடுஉண்டு ஏகினாள்***

***பெற்றிலன் பெருந்திறல்; பெயர்த்தும் போர் செயற்கு***

***உற்றது, நெடுந்துணை உடைமையால் என்றாள்"6***

என்ற கம்பனின் பாடல் வாயிலாக உணர முடியும். வாலி வினைவலியையும், தன் வலியையும், மாற்றான் வலியையும் மட்டுமே நோக்கினான். சுக்ரீவன் வலிமையில் தனக்கு எதிர்நிற்பவன் அல்லன் என்ற எண்ணம் மட்டுமே வாலியிடம் இருந்தது. ஆனால், வாலியின் மனைவி தாரையோ வினைவலி, தன் வலி, மாற்றான் வலி இவற்றுடன் துணை வலியும் சீர்தூக்கிப் பேசினாள்.

**முடிவுரை**

தாரை போருக்குச் செல்லும் தன் கணவனைத் தடுத்துக் கூறும் அறிவுரைகள், வாலி போர்க்களத்தில வீழ்ந்தபோது புலம்பி அழுதல், இலக்குவனது சினத்தைத் தணித்தல் போன்ற செயல்களால் அவளது அரசியல் அனுபவ அறிவு, பேச்சாற்றல் ஆகியவை விளக்கம் பெறுகின்றன.

மேற்கோள்

1. கம்ப. கிட்கிந்தா காண்டம், பா.எ. 4059.

2. மேலது., பா.எ. 4060: 1-3.

3. அ. அருணகிரி, கம்பனில் மேதைமை சான்ற மாதரார், ப. 44.

4. மேலது., ப. 57.

5. மேலது., ப. 58.

6. கம்ப. கிட்கிந்தா காண்டம், பா.எ. 4061.